



. 4 பக்கங்கள் . விலை ரூ. 5

# தின தமிழ்

தினசரி காலை நாளிதழ்

DHINA TAMIL

RNI No : TNTAM/2023/85936

www.dhinatamil.com — மாற்றத்தின் ஆரம்பம் — dhinatamil

.நாகர்கோவில் பதிப்பு . 13.02.2026 . மலர் 04 . இதழ் 43. வெள்ளிக்கிழமை | dhinatamil | . NAGERCOIL EDITION . 13.02.2026 . VOL 04 . ISSUE 43. FRIDAY . 4 PAGES . Rs. 5





## கதவை சாத்து... கண்டிஷன் போட்ட பாரதிய ஜனதா

# அடங்கிப்போன விஜய்!

சென்னை, பிப்.13-

கூட்டணி கதவை சாத்து என பாரதிய ஜனதா மேலிடம் போட்ட கண்டிஷனால், ஆடிப்போன விஜய், உடனடியாக சத்தமில்லாமல் அடங்கிப்போக, ஆட்சியில் பங்கு கேட்டு திமுகவை மிரட்டி வந்த காங்கிரஸ், கூட்டணியை விட்டு வெளியேற முடியாமலும், குடைச்சல்கொடுத்துக்கொண்டே கூட்டணியில் தொடர முடியாமலும் ஆடிப்போய் கிடக்கிறது.

தமிழகத்தில் நடைபெற உள்ள 17-வது சட்டசபை தேர்தலில் ஆளுங்கட்சியான திமுக 170 தொகுதிகளில் போட்டியிட முடிவு செய்துள்ளது. மீதமுள்ள 64 தொகுதிகளை கூட்டணி கட்சிகளுக்கு பகிர்ந்து வழங்கவும் திட்டம் வகுத்துள்ளது. திமுக கூட்டணியை பொறுத்தவரை கடந்த (2021) சட்டசபை தேர்தலில் அங்கம் வகித்த கட்சிகளே இந்த முறையும் தொடர்கின்றன.மேலும், மக்கள் நீதி மய்யம் கூடுதலாக இணைந்துள்ளது. இதனால், கடந்த முறை எந்தெந்த கட்சிகளுக்கு எவ்வளவு தொகுதிகள் வழங்கப்பட்டதோ, அதே இடங்களை மீண்டும் வழங்க திமுக முடிவு செய்திருந்தது. புதிதாக இணைந்த மக்கள் நீதி மய்யத்திற்கு 3 தொகுதிகள் வழங்கவும் திட்டம் வகுத்திருந்தது. .காங்கிரஸ் அதிருப்திஆனால், திமுக கூட்டணியில் அங்கம் வகிக்கும் தேசிய கட்சியான காங்கிரஸ், இந்த முறை ஆட்சியிலும் பங்கு வேண்டும் என்ற முக்கிய கோரிக்கையுடன் கூடுதல் தொகுதிகளையும் கேட்டு அடம்பிடித்தது. கூட்டணியில் உள்ள ஏனைய கட்சிகளும் இரட்டை இலக்க தொகுதிகளை கேட்டு நெருக்கடி கொடுத்து வந்தன.இதனால், கூட்டணிக்கு தலைமை தாங்கும் திமுக தொடர்ந்து அமைதி காத்தது. யாருடனும் தொகுதி பங்கீடு பேச்சு வார்த்தையை தொடங்கவில்லை. ஆனால், கடந்த 2 மாதத்திற்கு முன்பே தொகுதி பங்கீடு பேச்சு வார்த்தைக்கு குழு அமைத்து காத்திருந்த காங்கிரஸ் கட்சி தனது அதிருப்தியை வெளிக்காட்ட தொடங்கியது..இறங்கி வந்த காங்கிரஸ்இதுதொடர்பாக, டெல்லி சென்ற தமிழக காங்கிரஸ் தலைவர்கள், அகில இந்திய தலைமையிடம் திமுக குறித்து அடுக்கடுக்கான புகார்களை தெரிவித்தனர். அதை கேட்டுக்கொண்ட கட்சியின் தலைவர்கள் ராகுல்காந்தி, மல்லிகார்ஜுன கார்கே ஆகியோர், "தொகுதி பங்கீடு பேச்சு வார்த்தையை தொடங்க தாமதம் ஏன்? என்று திமுக தலைமையிடம் நேரடியாக கேளுங்கள். ஆட்சி அதிகாரத்தில் பங்கு என்பதை தேர்தலில் வெற்றி பெற்ற பிறகு பார்த்துக்கொள்ளலாம்.41 தொகுதிகள் என்பதை கேட்டுப்பெறுங்கள். எந்த வகையிலும் 35 தொகுதிகளுக்கு குறைந்துவிடக்கூடாது" என்றும்

## ஆடிப்போன காங்கிரஸ்!!

கூறியுள்ளனர். இவ்வாறு காங்கிரஸ் கட்சி இறங்கி வந்ததும், திமுகவும் கூட்டணி கட்சிகளுடன் வரும் 22-ந் தேதி முதல் தொகுதி பங்கீடு பேச்சு வார்த்தை தொடங்கும் என்று அறிவித்துவிட்டது..தாராளம் காட்டிய தவெகஆட்சியில் பங்கு என்று அடம்பிடித்த காங்கிரஸ் திடீரென இறங்கிவர காரணம் என்ன? என்று அரசியல் வட்டாரத்தில் பரபரப்பாக பேசப்பட்டது. காங்கிரஸ் கட்சிக்கும் ஒரே மாற்று வாய்ப்பாக இருந்த த.வெ.க., தனது கூட்டணி கதவை மூடிவிட்டதே இதற்கு காரணம் என்று சொல்லப்படுகிறது.முதலில் காங்கிரஸ் கட்சியை தங்களுடைய கூட்டணிக்கு அழைத்த த.வெ.க., 70 தொகுதிகள், ஒரு துணை முதல்-அமைச்சர் பதவி, 6 அமைச்சர் பதவிகளை தருவதாக தாராளம் காட்டியது. காங்கிரஸ் கட்சியும், ஆட்சியில் பங்கு என்று திமுகவுக்கு நெருக்கடி கொடுக்கத் தொடங்கியது. கோரிக்கையை திமுக ஏற்க மறுத்தால் தவெகவுடன் கூட்டணி அமைக்கவும் திட்டம் வகுத்தது..கூட்டணி கதவு மூடல்ஆனால், தவெக தலைமைக்கு மத்தியில் ஆளுங்கட்சி தரப்பில் இருந்து உத்தரவு ஒன்று வந்ததாக கூறப்படுகிறது. அதாவது, காங்கிரஸ் கட்சியை கூட்டணியில் சேர்க்கக்கூடாது என்பதுதான் அந்த உத்தரவாம். ஏற்கனவே, 'ஜனநாயகன்' திரைப்படம் வெளிவர முடியாத நிலை, கரூர் கூட்ட நெரிசலில் 41 பேர் இறந்தது தொடர்பாக கிடுக்கிப்படி சி.பி.ஐ. விசாரணை என்று இடியாப்ப சிக்கலில் தவித்து வரும் தவெக தலைமையால், மேலிட உத்தரவை தட்ட முடியவில்லையாம். அதனால், கனத்த இதயத்துடன் அதை ஏற்றுக்கொண்டு, காங்கிரஸ் கட்சிக்கு கூட்டணி கதவை அடைத்துவிட்டதாம். தவெகவின் இந்த திடீர் முடிவால் நிலைகுலைந்து போன காங்கிரஸ் கட்சியும் வேறு வழியில்லாமல் திமுகவிடம் இறங்கி வந்து மீண்டும் 'கை' கொடுக்க வேண்டிய நிலைமைக்கு தள்ளப் பட்டுவிட்டதாம்.

## மார்த்தாண்டம் அருகே புதிய நகை செய்து தருவதாக 23 பவுன் மோசடி

### பெண் உறவினர்களுடன் கடை முன்பு தர்ணா - போலீசார் 2 பேர் மீது வழக்கு




மார்த்தாண்டம், பிப். 13-

மார்த்தாண்டம் அருகே திக்குறிச்சி பகுதியை சேர்ந்தவர் சுஜின் (39), அதே பகுதியை சேர்ந்தவர் சுதர் (40) ஆகிய 2 பேர் இணைந்து ஞாறான்விளை பகுதியில் நகைக்கடை நடத்தி வருகின்றனர். இவர்களிடம் கிள்ளியூர், மாங்கரை பகுதியை சேர்ந்த அனிதா (45) என்பவர் மகளன்தி ருமணத்திற்காக புதிய நகைகள் செய்ய கேட்டு 23 பவுன் பழைய நகை மற்றும் 6 லட்சம் ரூபாய் போன்றவற்றை கடந்து 2024 ஆம் ஆண்டு கொடுத்துள்ளார்.

நகை மற்றும் பணத்தை பெற்றுக் கொண்ட சுஜின் புதிய நகை செய்து கொடுக்கவில்லை என்று கூறப்படுகிறது. நகை மோசடி செய்யப்பட்டதை அறிந்த அனிதா கடந்த ஆண்டு மார்த்தாண்டம் காவல் நிலையத்தில் புகார் அளித்தார். அதில் போலீசார் உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை என தெரிகிறது.

இந்த நிலையில் தற்போது வரை அனிதாவுக்கு அவர்கள் நகையை திருப்பிக் கொடுக்கவில்லை என்று தெரிகிறது. இதனால் விரக்தியடைந்த அனிதா தனது உறவினர்கள் சிலருடன் ஞாறான் விளையில் உள்ள நகைக்கடை முன்பு நேற்று முன்தினம் திடீரென திரண்டனர். பின்னர் தன்னிடம் மோசடி செய்த நகைகளை திருப்பி கேட்டு நகைக்கடை முன்பு வந்து தர்ணா போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் அங்கு பரபரப்பு ஏற்பட்டது.

இது குறித்து தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு வந்த மார்த்தாண்டம் போலீசார் போராட்டக்காரர்களிடம் பேச்சுவார்த்தை நடத்தினர். அப்போது நகை மோசடி செய்ததாக கடை உரிமையாளர்கள் மீது வழக்கு பதிவு செய்து நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று உறுதி அளித்தனர். இதை ஏற்றுக் கொண்ட அனிதா தரப்பினர் போராட்டத்தை கைவிட்டு கலைந்து சென்றனர்.

இது தொடர்பாக அனிதாவின் புகாரின் பேரில் மார்த்தாண்டம் போலீசார் சுஜன், சுதர் ஆகியோர் மீது வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

## அனைத்து தொழிற்சங்க கூட்டமைப்பினர் வேலூரில் மறியல்



வேலூர், பிப்.13-

ஒன்றிய மோடி அரசின் விவசாயிகள் தொழிலாளர் மற்றும் மக்கள் விரோத கொள்கைகளை கண்டித்து அகில இந்திய அளவில் நடைபெற்ற பொது வேலை நிறுத்தம் மற்றும் மறியல் போராட்டத்தின் ஒரு பகுதியாக அனைத்து மத்திய தொழிற்சங்கங்கள் சார்பில் வேலூர் தலைமை அஞ்சலகம் முன்பு மறியல் போராட்டம் நடைபெற்றது.

அழகுநம்பிவெல்கின் (சிஐடியு மாநில செயலாளர்), வெ.கலைநேசன்(எல்பிஎப்),

கே.கோவிந்தராஜ் (ஏஐடியுசி), முகமது அலிஜின்னா(ஐஎன்டியுசி), கா.வெ.திருப்பதி (எச்எம்எஸ்), எம்.சரோஜா(ஏஐசிசிடியு) , சி.எஸ்.மகாலிங்கம் (எஸ்கேஎம்) ஆகியோர் தலைமை தாங்கினர். இதில் சுமார் 400க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு கைதாகினர்.

## கன்னியாகுமரியில் மீண்டும் 11 கடைகளுக்கு அதிகாரிகள் சீல் வைப்பு வியாபாரிகள் 2ம் நாளாக போராட்டம்







கன்னியாகுமரி, பிப்.13-

கன்னியாகுமரி ரதவீதியில் பகவதி அம்மன் கோவிலுக்கு சொந்தமான கன்னியம்பலம் என்ற கல் மண்டபம் உள்ளது. இந்த மண்டபத்தின் உள் பகுதியில் வலம்புரி விநாயகர் கோயில் அமைந்துள்ளது. இந்த கன்னியம்பலம் 4 பக்கமும் திறந்த வெளியாக காணப்படும். இதனால் பகவதி அம்மன் கோயிலுக்கு வரும் பக்தர்கள் மற்றும் சுற்றுலா பயணிகளும் கன்னியம்பலத்துக்கு சென்று இளைப்பாறி வந்தனர்.

காலப்போக்கில் வியாபார நோக்கில் கன்னியம்பலத்தை சுற்றி ஏராளமான கடைகள் அமைக்கப்பட்டன. இதனால்

பக்தர்களுக்கு பயன்பட்டு வந்த கன்னியம்பலம் மூடப்பட்டது.


இந்த நிலையில் பழமை வாய்ந்த கன்னியம்பலம், மண்டபத்தை பாதுகாக்க வேண்டியும் புராதனமான இந்த மண்டபத்தை வியாபார ஸ்தலமாக மாற்றக்கூடாது என்றும் இந்த மண்டபத்தில் இருக்கின்ற அனைத்து கடைகளையும் அகற்ற வேண்டும் என்றும் மதுரை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது. இந்த வழக்கை விசாரித்த நீதிபதி கன்னியம்பலம் மண்டபத்தில் உள்ள கடை களை இடித்து அகற்ற வேண்டும் என்று உத்தர விட்டார்.

இதை தொடர்ந்து கடந்த மாதம் மண்டபத்தை மறைத்து கட்டப்பட்ட ஒரு ஓட்டல் மற்றும் கடை கன்னியாகுமரி நகராட்சி மூலம் இடித்து அகற்றப்பட்டது. மேலும் மண்டபத்தில் உள்ள மற்ற 12 கடைகளையும் அகற்ற வேண்டும் என்று மதுரை உயர்நீதிமன்றம் அறநிலையத்துறைக்கு உத்தரவு பிறப்பித்தது. இதைத் தொடர்ந்து கன்னியம்பலம் மண்டபத்தில் உள்ள 12 கடைகளையும் அகற்ற வேண்டும் என்று அறநிலையத்துறை நிர்வாகம் சார்பில் வியாபாரிகளுக்கு நோட்டீஸ் வழங்கியது. இதனைத்தொடர்ந்து வியாபாரிகள் 50 வருடங்களாக வியாபாரம் செய்து வரும் எங்களுக்கு வாழ்வாதாரம் பாதிக்கப்படுவதாக கூறி மாற்று இடம் கொடுக்க வேண்டும் என்ற கோரிக் கையை வலியுறுத்தி கன்னியாகுமரியில் அனைத்து வியாபாரிகள் சங்கம் சார்பில் முழு கடையடைப்பு போராட்டம் நேற்று முன்தினம் நடந்தது.

கன்னியாகுமரி இந்து அறநிலையத்துறை இணை ஆணையர் ஜான்சிராணி,பகவதி அம்மன் கோவில் மேலாளர் ஆனந்த் மற்றும் ஊழியர்கள் பலத்த போலீஸ் பாதுகாப்புடன் கடைகளை அகற்றவும், கடைகளுக்கு சீல் வைக்கவும் முற்பட்டனர். இதனைத்தொடர்ந்து வியாபாரிகள் திரண்டு கன்னியம்பலம் முன் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். மேலும் கடைகளுக்குள் இருந்தவாறு சீல் வைக்க முடியாதபடி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இதனால் நேற்று முன்தினம் ஒரு கடைக்கு மட்டும் சீல் வைக்கப்பட்டது. நேற்று மீதம் உள்ள 11 கடைகளுக்கும் இந்து அறநிலையத் துறை அதிகாரிகள் போலீஸ் பாதுகாப்புடன் சீல் வைத்தனர். இதனைத்தொடர்ந்து 2ஆவது நாளாக நேற்று வியாபாரிகள் சங்கம் சார்பில் கறுப்பு கொடி கட்டி முழு கடையடைப்பு நடத்தினர். சீல் வைக்கப்பட்ட கடைகளுக்கு முன் வியாபாரிகள் அமர்ந்து தர்ணாவில் ஈடுபட்டுள்ளனர். இதனால் கன்னியாகுமரியில் பலத்த போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. கடையடைப்பின் காரணமாக கன்னியாகுமரி சன்னதி தெரு, பார்க்வியூ பஜார், காந்தி மண்டப பஜார், விவேகானந்தா ராக் ரோடு, மெயின் ரோடு, ரத வீதி உள்பட்ட பகுதிகளில் அனைத்து கடைகள் அடைக்கப்பட்டு வெறிச்சோடி காணப்படுகிறது.

## அனைத்து கால்வாய்களிலும் தூர் வாரும் பணி : விவசாயிகள், அதிகாரிகள் ஆலோசனைக் கூட்டத்தில் தீர்மானம்



நாகர்கோவில், பிப்.13-

விவசாயிகள் மற்றும் விவசாய துறை அதிகாரிகள் ஆலோசனை கூட்டம் நேற்று நாகர்கோவில், நீர்வளத்துறை கோதையாறு வடிநெல கோட்ட அலுவணீலகத்தில் வைத்து நடந்தது. செயற்பொறியாளர் வசந்தி தலைமையில், பாசனத்துறை சேர்மன் வின்ஸ் ஆன்றோ, வேளாண் இணை இயக்குனர் வாணி , மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் கீதா ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் பாசனத்துறை மாவட்ட குழு உறுப்பினர்கள் தாணு பிள்ளை, முருகேசபிள்ளை, அந்தோணி, அருள், உதவி செயற்பொறியாளர்கள் வல்சன்போஸ் , கதிரவன், தணு மூர்த்தி, கிரிஸ்டோ, நீரினை பயன்படுத்துவோர் சங்க தலைவர்கள் செண்பகசேகரபிள்ளை ,ரவீந்திரன், கோபாலகிருஷ்ணன் , ஏசுதாஸ்,அருளானந்த ஜார்ஜ், ஜெனில்சிங், தங்கப்பெருமாள் , விஜயேந்திரன், வருக்கத்தட்டு தங்கப்பன், ராதாகிருஷ்ணன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்

கூட்டத்தில் நீர்வளத் துறையினர் பல மாதங்களுக்கு முன்பே பிப்ரவரி மாதத்துக்கு பின்பு தண்ணீர் வழங்குவதற்கு இயலாது என்று தெரிவித்த பின்னரும், வேளாண்மை துறை அதிகாரிகள் விவசாயிகளுக்கு குறுகிய கால விதை நெல்லை வழங்காமல் - நீண்டகால விதை நெல் வழங்கியது மற்றும் அதன் காரணமாக கூடுதல் நாட்கள் தண்ணீர் தேவைப்பட்டதால், விவசாயிகள் சார்பில் வேளாண்மை துறையினர் எதிர்காலத்திலாவது முன்கூட்டியே திட்டமிட வேண்டும் என்று கேட்டுக் கொள்ளப்பட்டது. அணைகளில் தண்ணீர் குறைவாக உள்ளதால் மார்ச் 15ஆம் தேதி வரை

தேவை அடிப்படையில், சுழற்சி முறையில் நெல் பயிர் உள்ள இடங்களுக்கு தண்ணீர் வழங்குவதற்காக அரசுக்கு கருத்துரு அனுப்புவதென தீர்மானிக்கப்பட்டது. மேலும் பிப்ரவரி 28 வரை ஏற்கனவே பிறப்பிக்கப்பட்ட அரசாணைப்படி அனைத்து சேனல்களிலும் முழுமையாக தண்ணீர் வழங்குவது எனவும், அடுத்த வருட பராமரிப்பு நிதி பணிகளை தேர்தலுக்கு இடையே மேற்கொள்ள வேண்டி இருப்பதால், தேர்தல் கமிஷனிடம் முன் அனுமதி பெற்று மே மாதம் இறுதிக்குள் அனைத்து கால்வாய்களிலும் தூர்வாரும் பணியை மழைக்காலத்திற்கு முன்பு முடிப்பது என தீர்மானிக்கப்பட்டது.


தின தமிழ் நாளிதழில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்!



கழுகுமலை பேரூராட்சியில் தூய்மை பணியாளர்களுக்கு காலை உணவு வழங்கும் திட்டத்தை பேரூராட்சி தலைவர் அருணா சுப்பிரமணியன் தொடங்கி வைத்தார், இந்நிகழ்ச்சியில் பேரூராட்சி அலுவலக பணியாளர், தூய்மை மற்றும் துப்புரவு பணியாளர்கள் உள்பட பலரும் கலந்து கொண்டனர்

## ஒருங்கிணைந்த காப்பக கட்டுப்பாடு வாரியம் சார்பில் சமூக நலன் அமைச்சருக்கு பாராட்டு விழா



தூத்துக்குடி, பிப்.13-

தூத்துக்குடியில் தனியார் திருமண மண்டபத்தில் வைத்து தமிழ்நாட்டில் செயல்படும் அனைத்து வகை பராமரிப்பு இல்லங்களின் கூட்டமைப்பாகிய NGO COACH TN சார்பில், சமூக நலன் மற்றும் மகளிர் நலன் துறை அமைச்சர் கீதா ஜீவன் அவர்களை நன்றி தெரிவிக்கும் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டது.

தமிழ்நாட்டில் ஒருங்கிணைந்த காப்பக கட்டுப்பாட்டு வாரியம் (Integrated Orphanage and All Care Homes Control Board) அமைப்பதற்கான எங்களது கோரிக்கையை ஏற்று அதனை தமிழ்நாடு அமைச்சரவைக்கும், முதல்வர் மற்றும் துணை முதல்வர் அவர்களுக்கும் பரிந்துரைத்தமைக்காக நன்றியினைத் தெரிவிக்கும் வகையில் இந்த நிகழ்வு நடத்தப்பட்டது.

இந்த நன்றியறிதல் கூட்டம் தூத்துக்குடி நகரில், கூட்டமைப்பின் மாவட்ட கூட்டமைப்பு மற்றும் மாநில நிர்வாகம் இணைந்து ஏற்பாடு செய்தன.

மேலும், அரசு மற்றும் அரசு சாரா அமைப்புகளுக்கு இடையே உறுதியான பாலம் அமைக்கும் நோக்கில்,

மாவட்ட சமூக நல அலுவலர், மாவட்ட குழந்தை பாதுகாப்பு அலுவலர், மற்றும் குழந்தைகள் நலக்குழு தலைவர் ஆகியோருடன் கருத்துப் பரிமாற்றம், வழிகாட்டல் மற்றும் கலந்துரையாடல் நடைபெற்றது.

இந்தக் கூட்டம் கூட்டமைப்பின் நிர்வாகிகள் மெர்வின் ஜோசஃப், ஜபின், பாலசந்திரன், ராதாகிருஷ்ணன், சாமுவேல் ஜெபசிங், ரகுராம், நிஜோ மற்றும் மாவட்ட கூட்டமைப்பு நிர்வாகிகள் ராஜப்பா, சிவகுமார், மாலினி, செல்வகுமார். ஸி சோயா சரவணன். ஆகியோர்கள் ஒருங்கிணைப்பில் நடத்தப்பட்டது.



மதுரை மாநகராட்சி வண்டியூர் பூங்காவில் ரூபாய்.50 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் புனரமைப்பு பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் கே.ஜே.பிரவீன் குமார் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

## புதிய எருமை வெட்டிபாளையம் அருள்மிகு காமாட்சி அம்பாள் உடனுறை வர முக்தீஸ்வரர் திருக்கோயில் ஆலய மஹா கும்பாபிஷேக பெருவிழா



திருவள்ளூர், பிப்.13-

திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி வட்டத்திற்கு உட்பட்ட புதிய எருமை வெட்டிபாளையம் கிராமத்தில், அமைந்துள்ள அருள்மிகு காமாட்சி அம்பாள் உடனுறை வர முக்தீஸ்வரர் திருக்கோயில் ஆலய மஹா கும்பாபிஷேக பெருஞ்சாந்தி பெருவிழா வெகு விமர்சையாக நடைபெற்றது.

இந்து சமய அறநிலைத்துறைக்கு உட்பட்ட 200 ஆண்டுகள் பழமை வாய்ந்த, இக்கோயில் பக்தகோடிகளுக்கு, வேண்டும் வரத்தை தருவதாக கோயில் நிர்வாகிகள் கூறுகின்றனர். இந்த விழாவானது கோயில் இணை ஆணையர் அனிதா , செயல் அலுவலர் மாதவன் ஆகியோர் ஏற்பாட்டிலும், கிராமவாசிகள் மற்றும் ஆலய நிர்வாகிகள் ஏற்பாட்டிலும் நடைபெற்றது.

சுவாமி தரிசனம் காண வருகை புரிந்த பக்தர்களுக்கு கோயில் நிர்வாகம் சார்பில் மாபெரும் அறுசுவை அன்னதானம் வழங்கப்பட்டது.

## உதகை நகரில் நவநீதா தோட்டக்கலை துறை இணை இயக்குனராக பொறுப்பேற்பு



உதகை, பிப்ரவரி. 13-

நீலகிரி மாவட்டம் உதகை நகரில் மத்தியில் தமிழக முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா முயற்சியால் உருபெற்ற ரோஜா பூங்காவிற்கு நவநீதா, தோட்டக்கலைத் துறை இணை இயக்குனராக பொறுப்பு ஏற்றுக் கொண்டார். இந்நிகழ்ச்சியின் நீலகிரி மாவட்ட விவசாய சங்கத் தலைவர் வெள்ளியப்பன் மாவட்டத் துணைத் தலைவர் கணேசன் செயலாளர் ஜின்னப்பன் துணைச் செயலாளர் நடராஜ் பொருளாளர் சுஞ்ஜையன் மார்க்கெட்டிங் நிம்மி ஜான் ஆகியோர்கள் கலந்து கொண்டு புதியதாக பொறுப்பேற்ற இணை இயக்குனருக்கு பொன்னாடை போர்த்தி வாழ்த்துக்களை தெரிவித்தனர்.

உங்கள் அபிமான
தின தமிழ்
செய்திகளை
Whatsapp - ல்
பின் தொடர

## திருவையாற்றில் திருக்குறள் முற்றோதல் விழா - 1,330 பேருக்கு பரிசு



தஞ்சாவூர், பிப்ரவரி. 13-

தஞ்சாவூர் மாவட்டம் திருவையாறு அமல்ராஜ் மெட்ரிகுலேஷன் மேல்நிலைப்பள்ளியில் பள்ளி நிர்வாகம் .தஞ்சாவூர் உலக திருக்குறள் பேரவை சார்பில் திருக்குறள் முற்றோதல் விழா சிறப்பாக நடைபெற்றது.

விழாவில் பள்ளியின் மாணவ மாணவிகள் திருக்குறளில் உள்ள அறத்துப்பால், பொருட்பாலில் உள்ள குறள்களையும், ஆசிரியர் கள் பெற்றோர்கள் இன்பத்துப் பாலில் உள்ள குறள்களை ஒப்பி வைத்தனர்.இந்த முற்றோதலில் மொத்தம்1,330 பேர்கலந்து கொண்டனர்.

இவர்களை பாராட்டி தஞ்சாவூர் சரக காவல் துணை தலைவர் ஜியா உல் ஹக் பரிசு சான்றிதழ்கள் வழங்கி பேசுகையில்:

ஒப்பற்ற நூலான திருக்குறளி லுள்ள ஒவ்வொரு குறளுக்கும் ஒரு புத்தகமே எழுதலாம். மாணவர்கள் நாள்தோறும் 1 அல்லது 2 திருக்குறள்களை பொருள் புரிந்து மனப்பாடம் செய்து அதன்படி வாழ்க்கையிலும் கடைபிடிக்க வேண்டும் என்றார்

மேலும் திருக்குறள் பாடல் வரிகளுக்கு மாணவி சாதனா பரதநாட்டியமாடினார் .விழாவில் அமல்ராஜ் மெட்ரிகுலேஷன் மேல்நிலைப்பள்ளி தாளாளர் சகாயராஜ், பள்ளி முதல்வர் பிரிஜெட் அமலி, துணை முதல்வர் செபஸ்டி சோபியா ,நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர்கள் புவன லெட்சுமி, ராஜலெட்சுமி, உலக திருக்குறள் பேரவை செயலாளர் பழ.மாறவர்மன், புலவர் அற திருமாவளவன், நிர்வாகிகள் தியாகராஜன், முரளி, தத்துவ கவிஞர் சண்முகம், நகைச்சுவை மாமன்ற செயலர் ஜெயக்குமார் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## குழித்துறை நீதிமன்ற வளாகத்தில் மது போதையில் கலாட்டா செய்த கொத்தனார் கைது

மார்த்தாண்டம், பிப்.13-

குழித்துறை நீதிமன்ற வளாகத்தில் நேற்று மது போதையில் பொதுமக்களை தகாத வார்த்தைகளால் திட்டியபடி ஒருவர் சுற்றி திரிந்துள்ளார். இதை பார்த்த மகளிர் விரைவு நீதிமன்ற பெஞ்ச் கிளார்க் இது குறித்து களியக்காவிளை போலீசாரிடம் புகார் அளித்தார். புகாரின் பேரில் போலீசார் அங்கு வரைந்து சென்று அந்த நபரை கைது செய்து காவல் நிலையத்தில் கொண்டு விசாரித்தனர்.

விசாரணையில் அவர் மேல குன்னவிளை பகுதியை சேர்ந்த விஜயகுமார் என்பதும், அவர் கொத்தனார் வேலை செய்வதும் தெரிய வந்தது. மேலும் அவர் நிலுவையில் உள்ள வழக்கில் ஆஜராகாமல் மது போதையில் நீதிமன்ற வளாகத்தில் சுற்றி திரிந்தது தெரிய வந்தது. போலீசார் அவர் மீது வழக்கு பதிவு செய்து கைது செய்தனர். பின்னர் ஜாமீனில் விடுதலை செய்தனர்.

## எஸ்டிபிஐ கட்சி மாவட்ட நிர்வாகி ஜாபர் சாதிக் மீதான அநீதியான கைது நடவடிக்கைக்கு கண்டிப்பு



கோவை: பிப்.13-

எஸ்டிபிஐ கட்சி, திருப்பூர் வடக்கு மாவட்டத் தலைவர், பஷீர் அஹமது கூறியதாவது-

திருப்பூர் வடக்கு மாவட்ட எஸ்டிபிஐ கட்சியின் துணைத் தலைவர் ஜாபர் சாதிக் அவர்களை, காவல்துறையின் ஏடிஎஸ் பிரிவு ஒரு வழக்கில் அவரை பொய்யாக தொடர்புபடுத்தி கைது செய்திருப்பதை எஸ்டிபிஐ கட்சியின் சார்பில் வன்மையாகக் கண்டிக்கிறோம். கிட்டத்தட்ட நான்கு ஆண்டுகளுக்கு முன்பு நடந்ததாகக் கூறப்படும் ஒரு நிகழ்வை தற்போது கையில் எடுத்து, அந்த வழக்கிற்கு எவ்வித தொடர்பும் இல்லாத ஜாபர் சாதிக் அவர்களைக் கைது செய்திருப்பது காவல்துறையின் ஒருதலைப்பட்சமான நடவடிக்கையையே காட்டுகிறது.

ஜாபர் சாதிக் அவர்கள் வெறும் அரசியல் கட்சிப் பணியோடு நின்றுவிடாமல், திருப்பூரில் மிகச்சிறந்த சமூகச் சேவகராக வலம் வருபவர். மதம், இனம் கடந்து அனைத்துத் தரப்பு மக்களிடமும் மிகுந்த அன்புடன் பழககூடியவர். பொதுமக்களுக்கு எந்தவொரு இடர் ஏற்பட்டாலும் உடனடியாக அங்கு சென்று களப்பணியாற்றும் நற்பண்பு கொண்டவரை, இந்த வழக்கில் தவறாகச் சேர்த்திருப்பது அவரது நற்பெயருக்குக் களங்கம் விளைவிக்கும் செயலாகும். ஆகவே, தமிழக அரசு உடனடியாக அவரை விடுதலை செய்திட வேண்டும் எனவும் கேட்டுக்கொள்கிறேன்.

அரசியல் ரீதியாகவும் சமூக ரீதியாகவும் மக்கள் பணியாற்றி வரும் ஒருவரை ஆதாரமின்றி கைது செய்திருப்பதை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது. இந்த வழக்கினை எஸ்டிபிஐ கட்சி சட்டரீதியாக எதிர்கொள்ளும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

## உதகை நகரில் அதிமுகவினர் தெருமுனைப் பிரச்சாரம்



உதகை பிப்ரவரி 13-

நீலகிரி மாவட்டம் உதகை சட்டமன்றத் தொகுதியில் அதிமுக சார்பில் தேர்தல் தெருமுனைப் பிரச்சாரம் பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிச்சாமி ஆணைக்கிணங்க நீலகிரி மாவட்ட செயலாளர் கப்பச்சி வினோத் உதகை காப்பிஹவுஸ் பகுதியில் வரவிருக்கின்ற தேர்தல் தெருமுனை பிரச்சாரத்தை தொடங்கி வைத்து பேசினார். இதில் முன்னாள் எம்பி அர்ஜுனன் நகரச் செயலாளர் கா.சண்முகம் மற்றும் கட்சி நிர்வாகிகள் செயல்வீரர்கள் தொண்டர்கள் பலர் கலந்து கொண்டு தெருமுனைப் பிரச்சார நிகழ்ச்சியை சிறப்பித்தனர்.

## சென்னை மாநில குடியரசுத் தின அணிவகுப்பு முகாமில் ஸ்ரீ அய்யப்பா மகளிர் கல்லூரி மாணவி ஆர். ஜீவிதா பங்கேற்பு - கௌரவிப்பு விழா



சென்னை, பிப்.13-

ஸ்ரீ அய்யப்பா மகளிர் கல்லூரி, சுங்கன்கடை என்.எஸ்.எஸ். அலகு 97-இன் II B.Sc Zoology மாணவி ஆர். ஜீவிதா, சென்னையில் நடைபெற்ற மாநில குடியரசுத் தின அணிவகுப்பு முகாமில் (State Republic Day Parade Camp – Chennai) சிறப்பாகப் பங்கேற்று கல்லூரிக்கும் மாவட்டத்திற்கும் பெருமை சேர்த்தார்.

மாநில அளவிலான இந்த முகாமில் பங்கேற்பதற்கான தேர்வுகள் மிகக் கடுமையானவை. ஒழுக்கம், அணிவகுப்பு திறன், உடல் தகுதி, தேசிய உணர்வு போன்ற பல்வேறு சுற்றுகளின் மதிப்பீட்டுகளில் சிறந்து விளங்கி ஜீவிதா மாநில அணியில் இடம்பிடித்தது குறிப்பிடத்தக்கது. இச்சாதனையை முன்னிட்டு கல்லூரியில் நடைபெற்ற கௌரவிப்பு நிகழ்வில்,டாக்டர் ஏ. பி. லிப்டன்

முன்னாள் முதன்மை அறிவியலாளர் - கடல் உயிரித் தொழில்நுட்பப் பிரிவு தலைவர், மத்திய கடல் மீன்வள ஆராய்ச்சி நிறுவனம் (ICAR), கொச்சி அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு ஜீவிதாவுக்கு பாராட்டு சான்றிதழையும் நினைவுப்பரிசும் வழங்கினார். கல்லூரி முதல்வர் வி.ஆர். அஞ்சனா அவர்கள், “மாநில குடியரசுத் தின அணிவகுப்பு முகாமில் பங்கேற்பது உயர்ந்த அளவிலான ஒழுக்கமும் அர்ப்பணிப்பும் தேவைப்படுகின்றது. எங்கள் கல்லூரி மாணவி இந்த பெருமை வாய்ந்த மேடையில் தன்னை வெளிப்படுத்தியது மிகவும் மகிழ்ச்சி அளிக்கிறது” என்று தெரிவித்தார். என்.எஸ்.எஸ். Programme Officer டாக்டர் ஸ்ரீயா ஜி. நாயர் அவர்கள்,

“ஜீவிதா NSS நடவடிக்கைகளில் தொடர்ந்து செயலில் ஈடுபட்டு, சமூக சேவையில் முனைப்புடன் செயல்படுகிறார். மாநில R.D.முகாமில் அவளின் பங்கேற்பு எங்கள் NSS அலகு 97-ன் மைல்கல்லாகும்” என பாராட்டினார். மேலும், கல்லூரி நிர்வாகம் சார்பில் தமிழ்நாடு அரசு, உயர்கல்வித் துறை, மாநில NSS பிரிவு, மாவட்ட நிர்வாகம், மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலியின் NSS திட்ட ஒருங்கிணைப்பாளர் டாக்டர் ஏ.வேலியப்பன், பயிற்சி அதிகாரிகள் ஆகியோருக்கு இந்த வாய்ப்பை வழங்கியதற்கும் மாணவர்கள் முன்னேற உதவியதற்கும் நன்றியை தெரிவித்தனர். கல்லூரி நிர்வாகம், ஆசிரியர்கள் மற்றும் மாணவிகள் அனைவரும் ஜீவிதாவின் சாதனையை பாராட்டி, அவள் எதிர்காலத்தில் மேலும் உயர்ந்த நிலைகளை அடைய வேண்டும் என்று நல்வாழ்த்துகள் தெரிவித்தன.

தின தமிழ் நாளிதழில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள் !

## தஞ்சாவூரில் மத்திய பா.ஜனதா அரசை கண்டித்து காங்கிரஸ் கட்சியினர் ஆர்ப்பாட்டம்





தஞ்சாவூர், பிப்ரவரி. 13-

100 நாள் வேலையை சிதைக்கும் மத்திய பா.ஜனதா அரசை கண்டித்து தஞ்சாவூர் கலெக்டர் அலுவலகம் முன்பு மாநகர மாவட்ட காங்கிரஸ் கட்சியின் சார்பில் ஆர்ப்பாட்டம் நடந்தது.

இதற்கு மாநகர மாவட்ட தலைவர் மகேந்திரன் தலைமை தாங்கினார் மாநகர மாவட்ட முன்னாள் தலைவர் பி.ஜி .ராஜேந்திரன் முன்னிலை வகித்தார். ஆர்ப்பாட்டத்தில் ஒடுக்கப்பட்ட ,பிற்படுத்தப் பட்ட ,மலைவாழ் மக்கள், மாற்றுத் திறனாளிகள் ,முதியோர் உள்ளிட்ட அனைத்து கிராம மக்களுக்கும் வேலைவாய்ப்பு, வறுமை ஒழிப்பு, பொருளாதார முன்னேற்றம் ,நீர் மேலாண்மை, சுகாதாரம், சமூக நீதி சமத்துவம் ஆகியவற்றை உள்ளடக்கிய மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு திட்டத்தை பாதுகாக்க வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் வலியுறுத்தப் பட்டன

இதில்நாடாளுமன்ற தொகுதி பொறுப்பாளர் ராஜா மோகன், நிர்வாகிகள் ஜேம்ஸ், முகம்மது பாட்ஷா, திருஞானம் , ராஜ், சாந்தா ராமதாஸ், மும்தாஜ் பேகம், சுப்பு தங்குராஜ், பிரபாகரன், ஸ்ரீதர் உள்பட பலர் மண்வெட்டி, சட்டியுடன் கலந்து கொண்டனர்.

## பள்ளி மாணவர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா



கோவை, பிப்.13-

கோவை மாநகர் மாவட்டம் இரத்தினபுரி பகுதி திமுக மற்றும் 47,வது வட்ட திமுக சார்பாக துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாளை முன்னிட்டு பகுதி பொறுப்பாளர் கோவை லோகு தலைமையில் வட்ட பொறுப்பாளர் செ, பூபாலன் முன்னிலையில் இரத்தினபுரி நேரு வீதியில் உள்ள மாநகராட்சி பள்ளியில் படிக்கும் 1000 மாணவ மாணவியர்களுக்கு நலத்திட்ட உதவிகளை கோவை மாநகர மாவட்ட பொறுப்பாளர் துரை செந்தமிழ் செல்வன் மத்திய மண்டல தலைவர் மீனா லோகு ஆகியோர் வழங்கினர்.

உடன் கோட்டை அப்பாஸ்,தமிழ்மறை ,வடவள்ளி தங்கம் வடவள்ளி குப்புசாமி சரஸ்வதி,மணி,இளைஞர் அமைப்பாளர் தனபால்,துணை அமைப்பாளர் துரை பிரவீன் குமார்,மணிகண்டன்,டாரா பிரேம் தேவ்,கே.ஆர் ராஜா ஆர்.கே.சுரேஷ், வட்ட பொறுப்பாளர்கள் பி ஆறுமுகம்,கே விஸ்வநாதன்,எஸ் பாசகுமார்,பெ, ராமசாமி கவுன்சிலர்கள் வைரமுருகன்,ராஜாபாண்டியன்,மற்றும் பள்ளி ஆசிரியர்கள்,பள்ளி மாணவர்கள் என பலர் பங்கேற்றனர்.

# திருவெண்ணெய்நல்லூர் அரசு கல்லூரி மாணவ மாணவிகளுக்கு மடிக்கணினி - திருக்கோவிலூர் சட்டமன்ற உறுப்பினர் பொன்முடி வழங்கினார் !



திருவெண்ணெய்நல்லூர், பிப்.13-
விழுப்புரம் மாவட்டம் திருவெண்ணெய்நல்லூர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் மடிக்கணினி வழங்கும் நிகழ்ச்சி கல்லூரி முதல்வர் இந்திரா தலைமையில் நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் திருக்கோவிலூர் சட்டமன்ற உறுப்பினர் பொன்முடி கலந்துகொண்டு கல்லூரி மாணவ, மாணவிகளுக்கு தமிழக அரசின் விலையில்லா மடிக்கணினியை வழங்கி சிறப்புரையாற்றினார். அப்போது பேசுகையில், உலகம் உங்கள் கையில் என்னும் நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய மடிக்கணினி வழங்கும் திட்டத்தை கடந்த ஜனவரி 5-ஆம் தேதி தமிழக முதலமைச்சர் ஸ்டாலின் தொடங்கி வைத்தார் என்றும், மேலும் மாணவ மாணவிகள் போட்டி தேர்வுகளுக்கு மடிக்கணினியை பயன்படுத்தும் நோக்கில் இத்திட்டம் தொடங்கப்பட்டு தமிழக முழுவதும் உள்ள அரசு கலைக் கல்லூரி, மருத்துவக் கல்லூரி, பொறியியல் கல்லூரி, விவசாயக் கல்லூரி, சட்டக் கல்லூரி, தொழில்நுட்பக் கல்லூரி ஆகிய துறைகளை சார்ந்த மாணவ மாணவிகள் பயன்பெற்று வருவதாக கூறினார். இந்த நிகழ்ச்சியில் பி.வி.ஆர்.விஸ்வநாதன், ஓம்சிவசக்திவேல், அஞ்சுகம் கணேசன், வட்டாட்சியர் ரகுராமன், சடகோபன் உள்ளிட்ட உள்ளாட்சி பிரதிநிதிகள், கல்லூரி பேராசிரியர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# திருக்காட்டுப்பள்ளி அருகே ரூபாய். 52. 45 கோடி மதிப்பில் புறவழிச்சாலை - உயர் மட்டப் பாலம் கட்டும் பணிகளுக்கு அமைச்சர் கோவி. செழியன் அடிக்கல் நாட்டினார்



தஞ்சாவூர், பிப்ரவரி. 13-
திருக்காட்டுப்பள்ளி அருகே புறவழிச் சாலை மற்றும் வெண்ணாற்றின் குறுக்கே உயர் மட்டப் பாலம் கட்டும் பணிகளுக்கு உயர் கல்வித்துறை அமைச்சர் கோவி. செழியன் அடிக்கல் நாட்டினார்.

தஞ்சாவூர் மாவட்டம் திருக்காட்டுப் பள்ளி அருகே மைக்கேல்பட்டியில் நெடுஞ்சாலை மற்றும் சிறுதுறை முகங்கள் துறை சார்பில் தஞ்சாவூர் (நெ) திட்டங்கள் கோட்டம் ஒருங்கிணைந்த சாலை உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் 2025-26 ன் கீழ் ரூ.22.60 கோடி மதிப்பீட்டில் திருக்காட்டுப்பள்ளி நகருக்கு கி.மீ.0/0 முதல் 3/2 வரை புறவழிச்சாலை அமைக்கும் பட்டு ள்ளது. புறவழிச்சாலையின் மொத்த நீளம் 3.092 கிலோ மீட்டர், அகலம் 12.00மீட்டர் (இருபுற மண் புருவங்களையும் சேர்த்து), புறவழி.ச்சாலையின் ஒடுதள அகலம் 7.00 மீட்டர். புறவழிச்சாலையில் உள்ள சிறு பாலங்களின் எண்ணிக்கை - 13 எண்கள் கொண்டது. மேலும் ரூ.29.85 கோடி மதிப்பீட்டில் திருக்காட்டுப்பள்ளி - செங்கிப்பட்டி பட்டுக்கோட்டை சாலையில் (எஸ்பி 99) கி.மீ. 5/10-6/2ல் வெண்ணாற்றின் குறுக்கே உயர் மட்ட பாலம் உயர் மட்ட பாலம் அமைக்கப்பட்டுள்ளது. உயர் மட்ட பாலத்தின் நீளம் 265.20 மீட்டர், உயர் மட்ட பாலத்தின் ஓடு தள அகலம் (இருவழி) 11.00 மீட்டர், உயர் மட்ட பாலத்தின் ஒடுதள அகலம் 12.00 மீட்டர், (இருபுற நடைப்பாதையையும் சேர்த்து) உயர் மட்ட பாலத்தின் தூண்கள் 16 தூண்கள். உயர் மட்ட பாலத்தின் மேல்தளம் / கண்கள் 17 கண்கள் (ஒரு கண்ணின் நீளம் 15.60 மீட்டர்) கொண்டது. ரூ.52,45 கோடி மதிப்பீட்டில் திருக்காட்டுப்பள்ளியில் புறவழிச்சாலை, வெண்ணா ற்றின் குறுக்கே உயர்மட்ட பாலம் கட்டும் பணிகளுக்கு உயர்கல்வித்துறை அமைச்சர்கோவி.செழியன் அடிக்கல் நாட்டினார்.


நிகழ்ச்சியில் தஞ்சாவூர் நாடாளு மன்ற உறுப்பினர் ச.முரசொலி, மாவட்ட வருவாய் அலுவலர் தெ.தியாகராஜன், திருவையாறு சட்டமன்ற உறுப்பினர் துரை. சந்திரசேகரன்,நெடுஞ்சாலைத்துறை கண்காணிப்பு பொறியாளர் (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) எஸ். பாலசுப்ரமணியன், சதய விழா குழுத்தலைவர் து. செல்வம், முன்னாள் மாவட்ட ஊராட்சித் தலைவர் உஷா புண்ணியமூர்த்தி, நெடுஞ்சாலைத்துறை திட்டங்கள் கோட்டப் பொறியாளர் பூங்கொடி, உதவி கோட்டப் பொறியாளர்கள் (திட்டங்கள்) சத்தியன், பாஸ்கரன், சுதாகர், ஆனந்தி மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

# பள்ளி மாணவ செல்வங்களுக்கு ஸ்பீக்கர் வழங்கப்பட்டது!




திருப்பூர், பிப்.13-
திருப்பூர் மாவட்டம் பல்லடம் சட்டமன்ற தொகுதி உட்பட்ட வீரபாண்டி அரசு மேல்நிலைப்பள்ளிக்கு சமூக நலத்துறையின் கிழ் கவுன்சிலிங் நிகழ்ச்சிக்கு வருகை தந்த இந்திராசுந்தரம் தொண்டு நிறுவனத்தின் தலைவர் இந்திராசுந்தரம் அவர்களிடம் பள்ளி மாணவ செல்வங்கள் ஸ்பீக்கர் வேண்டுமென்று கோரிக்கை வைத்தனர்

கோரிக்கை ஏற்று அவர் நேற்று வீரபாண்டி அரசு மேல்நிலைப் பள்ளியில் தலைமை ஆசிரியர் ஜெயலட்சுமி முன்னிலையில் 15.000 மதிப்புள்ள அவர்கள் கேட்ட ஸ்பீக்கரை பள்ளியில் ஒப்படைத்தார் இந்த நிகழ்வின்போது ஆசிரியர் பெருமக்கள் மாணவச் செல்வங்கள் இந்திராசுந்தரம் தொண்டு நிறுவனத்தின் செயலாளர் திரு ராஜா முஹம்மது உடன் இருந்தனர்.



கோவில்பட்டி சட்டமன்றத் தொகுதி, சவலாபேரி கிராமத்தில், ஊர் பொதுமக்களின் கோரிக்கையினை ஏற்று மாவட்ட கவுன்சிலர் பிரியா குருராஜ் நிதியிலிருந்து ( ஏழு) 7 லட்ச ரூபாய் மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்ட புதிய கலையரங்கத்தினை ஊர் பஞ்சாயத்து தலைவர் பூல்பாண்டியன் தலைமை வகித்தார், ஊர் பெரியவர்கள் மற்றும் இளைஞர்களின் முன்னிலையில் மாவட்ட கவுன்சிலர் பிரியா குருராஜ் இன்று ரிப்பன் வெட்டி, குத்துவிளக்கு ஏற்றி வைத்து மக்கள் பயன்பாட்டுக்கு திறந்து வைத்தார், அதனைத் தொடர்ந்து அனைவருக்கும் இனிப்புகள் வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் திமுக கயத்தாறு இளைஞர் அணி பெரியசாமி, சிவசுப்பிரமணியன், சுடலை பாண்டியன், வெள்ளத்துரை, தங்கவேலு, திமுக விளையாட்டு மேம்பாட்டு அணி கருத்தபாண்டியன், திமுக இளைஞரணி சஞ்சய், மற்றும் ஊர் பெரியவர்கள், பெண்கள் பலரும் கலந்து கொண்டனர் , இந்த நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை திமுக கிளை கழக செயலாளர் மருதுபாண்டியன் செய்திருந்தார்






மதுரை மாவட்டம், சுப்பிரமணியபுரத்தில் வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறையின் கீழ் செயல்படும் தமிழ்நாடு நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் சார்பில் கட்டப்பட்டு வரும் புதிய அடுக்குமாடி குடியிருப்பு பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் கே.ஜே.பிரவீன் குமார் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

# ஆன்லைன் காப்பீட்டு தளங்களில் அசத்தும் பாலிசி பஜார் நிறுவனம்




கோவை, பிப், 13-
கோவை நஞ்சப்பா சாலையில் உள்ள பார்க் எலன்சதனியார் அரங்கில் ஆன்லைன் காப்பீட்டு தலங்களில் ஒன்றான பாலிசி பஜார் நிறுவனம் செய்தியாளர் சந்திப்பு நடைபெற்றது. இ இச்செய்தியாளர் சந்திப்பிற்கு பாலிசி பஜாரின் ஆயுள் காப்பீட்டின் (தெற்கு) செயல்பாட்டுத் தலைவர் டேவிட் ஆஸ்கார் தலைமை தாங்கினார். செய்தியாளர் சந்திப்பில் கூறியதாவது, தென்னிந்தியாவில் குறிப்பாக கோவை மக்கள் கல்வி அறிவு மற்றும் வளர்ந்து வரும் தேவைக்கு வலுவான சந்தையாக உருவெடுத்துள்ளன .குழந்தைகளின் கல்வி மற்றும் ஓய்வு போன்ற லைஃப் ஸ்டைலுக்கான நிதி திட்டமிடல் குறித்து வாடிக்கையாளர்கள் அதிகளவில் விழிப்புணர்வு பெற்று வருகின்றனர். மேலும் பகுதியில் பாலிசி பஜாரின் இருப்பு நுகர்வோர் எதிர்பார்ப்புகளை நேருக்கு நேர் நிவர்த்தி செய்வதிலும் முழுமையாக சேவையாற்றுவதிலும் முக்கிய பங்கு வகிக்கும் என்று கூறினார்.

மாறிவரும் நுகர்வோர் போக்குகள், 2022 மற்றும் 2026க்கு இடையில் நீண்ட கால சேமிப்பு தேவைகள் குறித்த விசாரணைகள் இரு மடங்கிற்கும் மேலாக அதிகரித்துள்ளன. கடந்த நான்கு ஆண்டுகளில் பாலிசி பஜார் டேர்ம் மற்றும் சேமிப்புக்கான காப்பீட்டு துவையல் கூர்மையான அதிகரிப்பை கண்டுள்ளது.மாத சம்பளத்தில் பணிபுரியும் இளம் ஊதியதாரர்கள் அதிகமாக டேர்ம் காப்பீடு திட்ட வாடிக்கையாளர்களாக இருக்கிறார்கள்.

மேலும் வாடிக்கையாளர்களுக்கு பதிலாக காப்பீடியாளர்களே பிரிமியம் செலுத்தும் பிரீமியத்தை தள்ளுபடி செய்யும் திட்டங்கள் குறிப்பிடத்தக்க வரவேற்பை பெற்று வருகின்றன. காப்பீட்டின் ஒவ்வொரு கட்டத்திலும் வாடிக்கையாளர்களை ஆதரிப்பதற்கு பாலிசி பஜார் முன்னுரிமை அளிக்கிறது.

பாலிசி பஜாரின் ஆயுள் காப்பீட்டு நடவடிக்கைகள் 30க்கும் மேற்பட்ட நகரங்களை உள்ளடக்கியது, 3000+ ஆலோசகர்கள் உள்ளூர் வாடிக்கையாளர் தேவைகளை பூர்த்தி செய்கிறார்கள்.ஆயுள் காப்பீட்டு வணிகத்தில் சுமார் 40 % நேரடி ஈடுபாடுகள் மூலம் இயக்கப்படுவது குறிப்பிடத்தக்கது.

# பொது அறிவிப்பு

**வருவாய் கோட்ட அலுவலகம், பட்டுக்கோட்டை**
**ந.க.334/2026/அ 5 நாள்11.02 2026**

**பத்மாவதி க/பெ.மாணிக்கதேவர், பாரதி சாலை கரிக்காடு, நாடியும்பாள் புரம் கிராமம், பட்டுக்கோட்டை வட்டம், தஞ்சாவூர் மாவட்டம்.**

**மனுதாரர்**

**–எதிர்–**

**இல்லை**

**எதிர் மனுதாரர்**

**அறிவிப்பு**

**தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை மேற்படி முகவரியில் வசிக்கும் பத்மாவதி ஆகிய நான் கொடுக்கும் அறிவிப்பு என்ன வென்றால், எனது கணவர் மாணிக்க தேவர். த/பெ. விஸ்வலிங்க தேவர்.**
**என்பவர் கடந்த 05.08.2001 ஆண்டு தேதியன்று மேற்படி முகவரியில் இறந்து விட்டார். அவரது இறப்பை அந்நேரத்தில் எனது அறியாமையினாலும், கவனக் குறைவினாலும் பறிவு செய்ய தவறி விட்டேன். எனவே தற்போது காலதாமத கட்டணத்துடன் பதிவு செய்ய உத்தரவிட வேண்டுமாய் பட்டுக்கோட்டை, வருவாய் கோட்டாட்சியர் முன்பு மனு செய்திருந்தேன். அம்மனு விசாரணையில் உள்ளது. இதில் யாருக்கேனும் ஆட்சேபனை எதுவும் இருப்பின் இவ்வறிவிப்பு பிரதி வெளியான நாள் முதல் 15 நாட்களுக்குள் கனம் பட்டுக்கோட்டை, வருவாய் கோட்டாட்சியர் முன்பு நேரில் ஆஜராகி ஆட்சேபனையை தெரிவிக்க வேண்டியது. தவறினால் மனு அனுமதிக்கப்படும் என்பதை அறியவும்.**

**மனுதாரர்.**
**M.பத்மாவதி**

# அதிமுகவில் முன்னாள் சிறப்பு காவல் உதவி ஆய்வாளர்



கிருஷ்ணகிரி, பிப்.13-
கிருஷ்ணகிரியை சேர்ந்த முன்னாள் சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் வாசுதேவன் புது மனை புகுவிழா நடைபெற்றது, இந்த விழாவிற்கு அதிமுக துணை பொது செயலாளரும், முன்னாள் அமைச்சருமான கே.பி முனுசாமி மற்றும் அதிமுக சட்டமன்ற உறுப்பினரும், கிழக்கு மாவட்ட அதிமுக செயலாளருமான அசோக்குமார் ஆகியோர் வருகை தந்தனர்,

அவர்களுக்கு முன்னாள் சிறப்பு உதவி காவல் ஆய்வாளர் வாசுதேவன் மற்றும் காவல் ஆய்வாளர் திருமதி அமுதா வாசுதேவன் ஆகியோர் பொன்னாடை அணிவித்து சிறப்பான வரவேற்பு கொடுத்தனர்.

மேலும் இந்த நிகழ்ச்சியின் போது கிருஷ்ணகிரியில் சிறப்பு காவல் உதவி ஆய்வாளராக பணியாற்றி விருப்ப ஓய்வு பெற்ற வாசுதேவன்,

அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி கே. பழனிச்சாமி அவர்களின் செயல்பாட்டினால் ஈர்க்கப்பட்டு அதிமுக துணைப் பொதுச் செயலாளர் கே.பி. முனுசாமி முன்னிலையில் அதிமுக கட்சியில் தன்னை இணைத்துக் கொண்டார்.

இதனையடுத்து கழக துணைப்பொதுச் செயலாளர் கே.பி.முனுசாமி புதியதாக அதிமுக கட்சியில் தன்னை இணைத்துக் கொண்ட காவல் சிறப்பு உதவி ஆய்வாளர் வாசுதேவனுக்கு அதிமுக சால்வாவை அணிவித்து வரவேற்றார்,

அப்போது நகர செயலாளர் கேசவன், ஒன்றிய செயலாளர் கண்ணியப்பன், கூட்டுறவு சங்கத்தலைவர் சைலேஷ் கிருஷ்ணன், ஓட்டுனர் அணி துணை அமைப்பாளர் ஆஜி, எம்.ஜி.ஆர். மன்ற துணைச் செயலாளர் திம்மராயன், அம்மா பேரவை மாவட் பெருளாளர் கோபி, ஒன்றிய துணைச் செயலாளர் சத்திவேல், கிளை செயலாளர் தியகராஜன், மாவட்ட மாணவரணி இணைச் செயலாளர் கோவிதராஜ் உள்ளிட்ட பலர் கலந்துக் கொண்டனர்.

**தின தமிழ் நாளிதழில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள் !**

# சிவகங்கையில் கௌரவ விரிவுரையாளர்கள் தொடர் போராட்டம் - மாணவர்கள் பரிதவிப்பு



சிவகங்கை, பிப்.13-
தமிழகம் முழுவதும் அரசு கல்லூரிகளில் பணி செய்யும் கௌரவ விரிவுரையாளர்கள் கடந்த 5-நாட்களாக தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வருகிறார்கள். இதனால் தேர்வுகள் நெருங்கி வரும் நேரத்தில் கல்லூரிமாணவ மாணவிகள் பரிதவிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. தமிழகம் முழுவதும் அரசு கல்லூரிகளில் சுமார் 8 - ஆயிரத்திற்கும் மேற்பட்ட கௌரவ விரிவுரையாளர்கள் பல ஆண்டுகளாக தொடர்ந்து பணி செய்து வருகிறார்கள். ஆனாலும் இவர்களின் வாழ்க்கை தொடர்ந்து ஒரு கேள்விக் குறியாகவே உள்ளது. பொதுவாக கல்லூரிகளில் பணி செய்து வரும் நிரந்தர பேராசிரியர்கள் 2 - இலட்சத்திற்கும் மேலாக மாதச் சம்பளம் பெறுகின்றனர்.

ஆனால் அதே பணியைச் செய்து முடிக்கும் கௌரவ விரிவுரையாளர்கள் வெறும் ரூ 25 ஆயிரம் மட்டும் சம்பளம் பெற்று வேலை செய்கிறார்கள். இந்த நிலைப்பாட்டால் சுமார் 8 - ஆயிரம் கௌரவ விரிவுரையாளர்களின் குடும்பங்கள் வாழ்வாதாரத்திற்காக போராடிக் கொண்டிருக்கிறது. எனவே இவர்கள் முன்வைக்கும் கோரிக்கை: பல்கலைக் கழக மானியக் குழு நிர்ணயித்த ரூ.57, 700ஐ மாத ஊதியமாக வழங்க வேண்டும். ஆண்டில் 12 மாதங்களுக்கும் ஊதியம் வழங்க வேண்டும். பி.எப் மற்றும் இ .எப் அனைத்து கௌர விரிவுரையாளர்களுக்கும் வழங்க வேண்டும். பெண் விரிவுரையாளர்களுக்கு மகப்பேறு விடுப்பு வழங்க வேண்டும். ஓய்வு பெற்ற கௌரவ விரிவுரையாளர்களுக்கு பணிக்கொடையாக ரூ. 25 லட்சம் வழங்க வேண்டும். ஆகியவற்றை இவர்கள் கோரிக்கையாக முன் வைக்கின்றனர். எனவே அரசின் கவனம் இவர்கள் பக்கமும் திரும்புமா என பொறுத்திருந்து பார்ப்போம்.

# நேரடி நெல் கொள்முதல் நிலைய ங்களில் விவசாயி அல்லாத நபர்கள் போலி ஆவணங்கள் மூலம் நெல் விற்பதை தடுக்க குழு - அரசு செயலாளர் பழனிச்சாமி தகவல்



தஞ்சாவூர், பிப்ரவரி. 13-
நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் விவசாயி அல்லாத நபர்கள் போலி ஆவணங்கள் மூலம் நெல் விற்பதை தடுக்க குழு அமைக்கப் பட்டுள்ளது என அரசு செயலாளர் பழனிச்சாமி தெரிவித்தார்

சம்பா பருவ காலத்தில் நெல் கொள் முதல் பணிகள் குறித்து தஞ்சாவூர்அடுத்த முனையம்பட்டி திறந்தவெளி சேமிப்பு நிலையம் மற்றும் வல்லம் நேரடி நெல் கொள் முதல் நிலையத்தில் கூட்டுறவு உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அரசு செயலர் கே எஸ் பழனிச்சாமி நுகர் பொருள் வாணிபக் கழக நிர்வாக இயக்கு னர் அண்ணாதுரை, கலெக்டர் பிரியங்கா பங்கஜம், மாவட்ட வருவாய் அலுவலர் தியாகராஜன், முதுநிலை மண்டல மேலாளர் செல்வம் ஆகியோர் முன்னிலையில் கள ஆய்வு மேற்கொண்டார்

தொடர்ந்து அவர் தஞ்சாவூர் மாவட்ட கலெக்டர் அலுவலக கூட்ட அரங்கில் ஆய்வு கூட்டத்திற்கு தலைமை தாங்கினார். பின்னர் அவர் கூறியதாவது:

தஞ்சாவூர் மாவட்டத்தில் சம்பா பருவ கொள்முதல் பணிகளுக்காக 540 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப் பட்டுள்ளது இதுவரை 1.31 லட்சம் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டு 26 ஆயிர த்து 369 விவசாயிகளுக்கு ரூபாய் 254.57 கோடி தொகை வழங்கப்பட் டுள்ளது.

இதுவரை 1 லட்சத்து 7 ஆயிரத் து308 டன் நெல் பாதுகாப்பாக இயக்கம் செய்யப்பட்டுள்ளது. தற் போது தரை இருப்பாக உள்ள 23 ஆயிரத்து 927 டன் நெல்லை 48 மணி நேரத்தில் நகர்வு செய்ய வேண்டும்

தஞ்சாவூர் மாவட்டத்தில் சம்பா பருவத்தில் 3.23 லட்சம் ஏக்கர் நெல் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இது வரை 1 லட்சம் ஏக்கரில் அறுவடை செய்யப்பட்டுள்ளது. மீதமுள்ள 2.23 லட்சம் ஏக்கரில் மேலும் 5 லட்சம் டன் நெல் அறுவடையாகும் என எதிர்பார்க்கப்படுகிறது

சென்ற ஆண்டு சம்பா பருவத் தில் 5 லட்சத்து 3 ஆயிரத்து 571 டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டது. நடப்பு சம்பா பருவத்தில் 6லட்சம் டன் நெல் கொள்முதல் செய்யப்படு ம் என எதிர்பார்க்கப்படுகிறது.

தஞ்சாவூர் மாவட்டத்தில் 5 லட்சம் டன் நெல்லை இருப்பு வைக்க 30கிடங்குகளும், 12 திறந்த வெளி சேமிப்பு மையங்களும் தயார் நிலையில் உள்ளது. திறந்த வெளி சேமிப்பு மையங்களுக்கு தேவை யான சவுக்கு கட்டைகள், வெட்டு கற்கள் இருப்பில் உள்ளன. நேரடி நெல் கொள்முதல் நிலைய ங்களில் விவசாயிகளில் நெல் மட்டுமே பெறப்படும் .விவசாயி அல்லாத நபர்கள் போலியான ஆவணங்களை பயன்படுத்தி நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் விற்பனை செய்வதை தடுக்க மண்டல அளவில் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

கூட்டத்தில் வேளாண் இணை இயக்குனர் வித்யா, மாவட்ட கலெக் டரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை ) சாமுவேல், மத்திய கூட்டுறவு வங்கி இணைப்பதிவாள ர் பெரியசாமி ,கும்பகோணம் மத்தி ய கூட்டுறவு வங்கி இணைப்பதிவாளர் முத்துக்குமார், டி.சி.எம்.எப். இணை பதிவாளர் ஆனந்தி மற்றும் பலர் கலந்து கொண்டனர்.



கோவை கமிஷனர் அலுவலகம் அருகில் ரூ 25 லட்சம் மதிப்பீட்டில் தனியார் பங்களிப்புடன் அமைக்கப்பட்ட தன்னைத் தானே செதுக்கிக் கொள்ளும் மனிதன் சிலையை கோவை மாவட்ட ஆட்சியர் ரிப்பன் வெட்டி தெரிந்து வைத்தார். இதுகுறித்து செய்தியாளர்களிடம் கூறுகையில் இந்த சிலையானது வெயில் மழையிலும் பாதிக்கப்படாத வகையில் தரம்மிக்க உலோகங்களால் உருவாக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்தார். உடன் மாநகராட்சி ஆணையாளர் சிவகுரு பிரபாகரன் கலந்து கொண்டார்.

## சுசீந்திரத்தில் ஒன்றிய பட்ஜெட்டில் தமிழ்நாட்டை வஞ்சித்த பா.ஜ.க.-வையும், அதற்கு துணை போகும் அ.தி.மு.க. வையும் கண்டித்து மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்!



சுசீந்திரம்.பிப்.13

சுசீந்திரத்தில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் ஒன்றிய பட்ஜெட்டில் தமிழ்நாட்டை வஞ்சித்த பா.ஜ.க.-வையும், அதற்கு துணை போகும் அ.தி.மு.க. வையும் கண்டித்து மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

கண்டன ஆர்ப்பாட்டத்தை சுசீந்திரம் பேரூர் செயலாளர் சுதைசுந்தர் துவக்கி வைத்தார்ஒன்றிய திமுக செயலாளர் பாபு முன்னிலை வகித்து கூறும் போது பட்ஜெட்டில் தமிழ்நாட்டை வஞ்சித்த பாஜகவை கண்டித்தும் தமிழ்நாட்டை எப்பொழுதும் புறக்கணித்து வரும் மோடிக்கு எதிராகவும் பாஜாக உடன் கூட்டு சேர்ந்து துரோகம் செய்யும் அதிமுகவை கண்டித்தும் தமிழ்நாட்டிற்கு நிதி ஒதுக்காததை கண்டித்தும் இந்த ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது என்றார் அவருடன் சுசீந்திரம் பேரூராட்சி தலைவர் அனுசுயா மதிமுக ஒன்றிய செயலாளர் பாலசுப்பிரமணியம் மதிமுக இலக்கிய அணி செல்வகுமார் விடுதலைச் சிறுத்தைகள் கட்சி பொறுப்பாளர் சகாய தாஸ் மற்றும் திமுக பொறுப்பாளர் அழகு தாமோதரன் மதிமுக விடுதலை சிறுத்தைகள் உட்பட்ட கட்சி பிரமுகர்களும் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர்

## மானாமதுரை ரயில் நிலையத்தில் ரயில் விபத்து ஒத்திகை



மானாமதுரை, பிப்ரவரி 13-

மானாமதுரை ரயில் நிலையத்தில் வியாழக்கிழமை (பிப்ரவரி 12) அன்று ரயில் விபத்து ஒத்திகை நடைபெற்றது. பயணிகள் ரயில் விபத்து நடைபெற்றால் அதை சமாளிக்க ரயில்வே அதிகாரிகளின் தயார் நிலை பற்றி கணக்கிடுவதற்காக இந்த ஒத்திகை நடத்தப்பட்டது.

இந்த ஒத்திகையில் மதுரை கோட்ட ரயில்வே மேலாளர் ஓம் பிரகாஷ் மீனா, கூடுதல் கோட்ட ரயில்வே மேலாளர் எல்.என். ராவ், முதுநிலை கோட்ட பாதுகாப்பு அதிகாரி கே. மொஹைதீன் பிச்சை உட்பட ரயில்வே அதிகாரிகளும், தேசிய பேரிடர் மீட்பு படை இணை ஆணையர் சங்கட் கெய்க்வாட் தலைமையில் 31 படை வீரர்களும் கலந்து கொண்டனர். மேலும் ஜெயின்ட் ஜான் ஆம்புலன்ஸ் பிரிவு அலுவலர்கள், ஊர்க்காவல் படை வீரர்கள், உள்ளூர் நகராட்சி அதிகாரிகள், சிவகங்கை அரசு மருத்துவமனை மருத்துவர்கள், காவல்துறை, தீயணைப்பு துறை அதிகாரிகள், காரைக்குடி செஞ்சிலுவைச் சங்க அலுவலர்கள் ஆகியோரும் கலந்து கொண்டனர். இந்த ஒத்திகை,

காலை 10.05 மணிக்கு மானாமதுரையில் திருச்சிராப்பள்ளி - மண்டபம் சிறப்பு ரயில் (006849) தடம் புரண்டதாக தகவலுடன் துவங்கியது. தகவலை பெற்ற மதுரை ரயில் இயக்க கட்டுப்பாட்டு அலுவலர் அவசர நடவடிக்கைக்கான அபாய சங்கு ஒலியை எழுப்பினார்.

அபாய அறிவிப்பை கேட்டவுடன் கோட்ட ரயில்வே மேலாளர் உட்பட ரயில்வே அதிகாரிகள் மற்றும் ஊழியர்கள் கட்டுப்பாட்டு அறையில் கூடினர். ஆறாவது ரயில் பாதையில் நடைபெற்ற இந்த விபத்தில் இரண்டு இரண்டாம் வகுப்பு படுக்கை வசதி பெட்டிகள் தடம்புரண்டு கவிழ்ந்தன. இதன் காரணமாக 25 மீட்டர் நீளத்திற்கு மின்மய மின்சார வயர் அறுந்து தொங்குகிறது. ரயில் தொடரில் நான்காவது ஐந்தாவது பெட்டிகள் தடம் புரண்டதால் இன்ஜினுக்கும், மற்ற சைகை உபகரணங்களுக்கும் எந்த பாதிப்பும் இல்லை. அருகிலுள்ள மற்ற ஐந்து பிரதான பாதைகளில் ரயில் போக்குவரத்து பாதிப்பு இல்லாமல் தொடர்கிறது என தகவல் மதுரை கோட்ட அலுவலகத்தில் கிடைத்தது.

தகவல் அறிந்தவுடன் மதுரை ரயில்வே கோட்ட மேலாளர் ஓம் பிரகாஷ் மீனா மூத்த அதிகாரிகளுடன் மானாமதுரைக்கு விரைந்து சென்றார். மீட்பு பணிகளுக்காக மதுரையில் இருந்து 140 டன் எடை தூக்க வல்ல கிரேனுடன் கூடிய விபத்து மீட்பு ரயில் மானாமதுரைக்கு அனுப்பி வைக்கப்பட்டது. இந்த ஒத்திகையில் விபத்து நடந்த இடத்தில் குறுகிய கால இடைவெளியில் சரியான நேரத்தில் அனைத்து தரப்பினரும் கூடி மீட்பு பணிகளில் ஈடுபடும் ஒத்திகையும் நடந்தது. இதன் மூலம் கோட்ட ரயில்வே நிர்வாகத்தின் அவசர காலத்திற்கான தயார் நிலை சரிபார்க்கப்பட்டு பலப்படுத்தப் பட்டது.




## பொது அறிவிப்பு

உயர்திரு வருவாய் கோட்டாட்சியர் அவர்கள்
திருப்பூர். ஒ.மு.எண்:8539/2025ஆ2 நாள்.09.02.2026
திரு. வேல்முருகன் த/பெ. போஸ், க.எண்:1/740
அமராவதி நகர், வீரபாண்டி. திருப்பூர் மாவட்டம்.

மனுதாரர்

/எதிர்/

உயர்திரு வருவாய் கோட்டாட்சியர் அவர்கள் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம் குமரன் ரோடு, திருப்பூர்.
பார்வை: மனுதாரர் வேல்முருகன்.த/பெ. போஸ்
என்பவரது மனு நாள்:29.12.2025

எதிர் மனுதாரர்

அறிவிப்பு

மேற்படி வேல்முருகன் என்பவரது மகன் மனுதாரரின் மகன் V.கார்த்திக் என்பவர் திருப்பூர் என்ற முகவரியில் கடந்த 17.09.2007 ஆண்டு அன்று பிறந்தது, தொடர்பாக அவரது பிறப்பினை பதிவு செய்து தரக் கோரி மனுதாரர். திருப்பூர் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் மனு செய்துள்ளார். இந்த மனு மீது யாருக்கேனும் ஆச்சேபனை ஏதேனும் இருப்பின் இந்த அறிவிப்பு பிரதி வெளியான 15 தினத்திற்குள் மேற்படி வருவாய் கோட்டாட்சியர் குமரன் ரோடு திருப்பூர் அவர்களிடத்தில் நேரில் ஆஜராகி விளக்கம் தெரிவிக்கவும் தவறும் பட்சத்தில் மேற்படி மனுதாரரின் மனுவை அனுமதிக்கப்படும் என்பதை இதன் மூலம் அறியவும்

மனுதாரர்
திரு. வேல்முருகன்.

## அனுமதி இல்லாமல் பனை மரங்கள் வெட்டி அழிப்பு சமூக ஆர்வலர்கள் வேதனை



இராமநாதபுரம்.பிப்.13-

இராமநாதபுரம் அருகே அரசு அனுமதி இல்லாமல் பனை மரங்களை வெட்டி அழிப்பதாக சமூக ஆர்வலர்கள் பனை தொழிலாளர்கள் குற்றச்சாட்டினர்.

ராமநாதபுரம் மாவட்டம் மேதலோடை பஞ்சாயத்து சித்தங்காடு பகுதியில் அரசு அனுமதி இல்லாமல் பனை மரங்களை வெட்டி அழிப்பதால் பனைத் தொழிலாளர்களின் வாழ்வாதாரம் பாதிப்பு என குற்றச்சாட்டு தெரிவித்தனர்.

தமிழக அரசு அரசு அனுமதி இல்லாமல் பனை மரங்களை வெட்டக்கூடாது என அரசாணை உத்தரவு பிறப்பித்து உள்ளது. இந்நிலையில் ராமநாதபுரம் மாவட்டத்தில் அரசு அனுமதி இல்லாமல் பனை மரங்கள் வெட்டி அழிப்பதால் பனை தொழிலாளர்களின் வாழ்வாதாரம் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. மேலும் பனைத் தொழிலை நம்பி ஆயிரக்கணக்கான மகளிர் சுய உதவி குழு பெண்கள் அழகு சாதன பொருட்கள், பாய்,பொம்மைகள் உள்ளிட்ட பல்வேறு விதமான குடிசைத் தொழில் செய்து வருகின்றனர்.

இந்நிலையில் மேதலோடை பகுதி சித்தங்காடு என்ற இடத்தில் ஆயிரக்கணக்கான பனை மரங்களை அடியோடு வெட்டி சாய்த்து அளிப்பதால் பெரும் பரபரப்பு பதட்டமும் ஏற்பட்டுள்ளது. இது தொடர்பாக அப்பகுதியை சேர்ந்த பனைத் தொழிலாளர்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் அரசு துறை அதிகாரிகளிடம் புகார் செய்தனர்.

மாவட்ட நிர்வாகத்திடமோ கீழக்கரை வருவாய்த் துறையிலோ உரிய அனுமதி பெறவில்லை என கூறப்படுகிறது.

ஆகவே ராமநாதபுரம் மாவட்ட நிர்வாகம் உடனடியாக பணம் மரங்களை விட்டு அழிப்பதை தடுக்க வேண்டுமென கோரிக்கை விடுத்துள்ளனர்.

# சிவகங்கை மாவட்டம்
# சிவகங்கை நகராட்சி

நகராட்சிக்குட்பட்ட சாலை சிவகங்கை பொதுமக்களுக்கும், போக்குவரத்திற்கும் இடையூராக திரியும் கால்நடைகளால் மற்றும் பொது இடங்களில் ஏற்படும் தொல்லைகளை கட்டுப்படுத்தும் பொருட்டு உள்ளாட்சி அமைப்பு விதிகள் 2023 மற்றும் கீழ்கண்ட சட்ட பிரிவுகளின்படி துணை விதிகள் ஏற்படுத்தப்படுகிறது.

* தமிழ்நாடு பொது சுகாதார சட்டம் 1939 பிரிவு 41(3), 41(4), 44, 51(1), 61,131
* தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புச்சட்டம் 1998 பிரிவு 105,106,107, 177(2)
* தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள் 2023, விதி எண் 292
* திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2016, விதி எண் 15 (zf)
* விலங்குகள் வதை தடுப்பு சட்டம் (Prevention of Cruelty to Animals Act, 1960)
* இந்திய தண்டனைச் சட்டம் 1860, பிரிவு 268, 289 – 503 ன்படி

சிவகங்கை நகராட்சி எல்லைக்குட்டபட்ட பகுதிகளில் சாலைகளில் பொதுமக்களுக்கும் போக்குவரத்திற்கும் இடையூராக திரியும் கால்நடைகள் அவ்வப்போது பிடிக்கப்பட்டு அபராதம் வசூலிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. ஆனால் கொண்டியாய் திரியும் கால்நடைகளால் ஏற்படும் இடையூறுகள், தொல்லைகள் மற்றும் சாலை விபத்துகள் அதிகரித்துக் கொண்டே செல்கிறது.

எனவே இதனை ஒழுங்குபடுத்தி கட்டுபடுத்தும் பொருட்டு அபாராத தொகையினை உயர்த்தியும், தொடர்ச்சியாக இரண்டு முறைக்கு மேல் விதிகளை மீறும் மாடுகளை பொது ஏலத்தில் விற்கவும் அல்லது கோசாலாவசம் ஒப்படைத்திடவும் கீழக்கண்டவாறு அமைக்கப்பட்டுள்ளது. உரிமம் மற்றும் அபராதம் திருத்தி

கால்நடைகள் பதிவு மற்றும் உரிமம் வழங்குதல்:

தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 1998 பிரிவு 105 மற்றும் தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள் 2023 பிரிவு 292 ன்படி சிவகங்கை நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள கால்நடைகள் வளர்க்கும் உரிமையாளர்கள் ஆண்டுதோறும் கால்நடைகளுக்கு உரிமம் பெற்றிட வேண்டும்.

கால்நடை வளர்க்கும் உரிமையாளர்கள் ஒவ்வொரு கால்நடைக்கும் தனித்தனியாக கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு சம்பந்தப்பட்ட வார்டு சுகாதார ஆய்வாளர்க்கு முறையீடு செய்து ஒரு ஆண்டிற்கு உரிமம் கட்டணம் செலுத்தி, ஆணையாளர் அல்லது அவரால் நியமிக்கப்படும் அலுவலரிடம் உரிமம் பெறப்பட வேண்டும்.

| வ. எண். | கால்நடை விபரம் | உரிமம் தொகை ரூ. |
|---|---|---|
| 1. | மாடுகள் | 100/– |
| 2. | கன்று, ஆடு | 50/– |
| 3. | குதிரை | 150/– |
| 4. | நாய்கள் | 100/– |
| 5. | வீட்டு விலங்குகள்/செல்லப்பிராணிகள்/ பறவை இனங்கள் | 100/– |

நிபந்தனைகள்:

கால்நடைகளை தொழுவம் அமைத்து சுகாதார முறையில் பராமரிக்கப்பட வேண்டும்.
கால்நடைகளை சாலைகளில் அல்லது பொது இடங்களில் வைத்து பராமரிக்க கூடாது.
தொழுவம் ஆனது குடியிருப்பு பகுதிகளில் அமைக்க கூடாது.
கால்நடை வளர்க்கும் உரிமையாளர்கள் தங்கள் கால்நடைகளை தொழுவத்தில் கட்டி வளர்க்க வேண்டும். அதனை சாலைகளில் திரியவிடக் கூடாது.
பொது மக்கள் மற்றும் சுற்றுப்புற பகுதிகளுக்கு எவ்வித இடையூறு இல்லாமல் வளர்த்திட வேண்டும்.
கால்நடைகளால் உருவாகும் திட மற்றும் திரவுக்கழிவுகளை (Liquid Waste Management) சொந்த வாகனம் அமைத்து நகராட்சியால் அறிவிக்கப்படும் இடத்தில் அப்புறப்படுத்தப்பட வேண்டும். நகராட்சியின் பொது குப்பை தொட்டியில் அப்புறப்படுத்த கூடாது.
கால்நடைகளால் உருவாகும் திரவக்கழிவுகளை சாலைகளிலோ, நீர்நிலைகளிலோ, நகராட்சி பாதாள சாக்கடைகள் மற்றும் மழைநீர் கால்வாயில் அப்புறப்படுத்தக்கூடாது.
கால்நடை பராமரிப்பதனால் அந்த இடத்தில் ஈக்கள் மற்றும் கொசு உற்பத்திக்கு வாய்ப்புகள் ஏற்படாத வண்ணம் இருத்தல் வேண்டும்.
தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பு விதிகள். 2023 பிரிவு 292(4) ல் உள்ள விதிகளை பின்பற்றப்பட வேண்டும்.
தொழுவத்தினை தினந்தோறும் கிருமிநாசினி தெளித்து நோய் தொற்று ஏற்படாதவாறு பராமரிக்கப்பட வேண்டும்.

1. தெருக்களில் அவிழ்த்துவிடப்பட்ட கால்நடைகள் மீது நடவடிக்கை:

தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 1998 பிரிவு 106 ன்படி சிவகங்கை நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கொண்டியாய் அவிழ்த்து விடப்பட்ட கால்நடைகளை நகராட்சி ஊழியர்கள் அல்லது நகராட்சியால் நிர்ணயம் செய்யப்பட்ட தனியார் தொண்டு நிறுவனம் அல்லது தனியார் அமைப்பு மூலம் பிடித்து கீழ்க்கண்டவாறு அபராதம் (Spotfine) விதிக்கப்படும்

| வ. எண். | குற்ற விபரம் | தற்போதைய அபராத தொகை ரூ. | திருத்திய அபராத தொகை ரூ. |
|---|---|---|---|
| 1. | Spotfine - மாடு, குதிரை, பன்றி | இல்லை | 3,000/– |
| 2. | Spotfine - கன்று, கழுதை, ஆடு | இல்லை<br>இல்லை | 1,500/–<br>500/– |
| 3. | முதல் முறை மாடு, குதிரை, பன்றி | இல்லை | 3,000/– |
| 4. | முதல் முறை கன்று, கழுதை, ஆடு | இல்லை<br>இல்லை | 1,500/–<br>500/– |
| 5. | இரண்டாம் முறை மாடு, குதிரை, பன்றி | இல்லை | 5,000/– |
| 6. | இரண்டாம் முறை கன்று, கழுதை, ஆடு | இல்லை<br>இல்லை | 3,000/–<br>1,000/– |
| 7. | இரண்டு முறைக்கு மேல் அல்லது 5 நாட்களுக்கு மேல் உரிமை கோரப்படாதவை (மாடு, குதிரை, பன்றி) | இனம் இல்லை | 10,0000/– அல்லது நகராட்சி ஆணையர் அவர்களால் பொது ஏலம் விடப்படும். அல்லது கோசால வசம் ஒப்படைக்கப்படும். |
| 8. | இரண்டு முறைக்கு மேல் அல்லது 5 நாட்களுக்கு மேல் உரிமை கோரப்படாதவை (கன்று, கழுதை, ஆடு) | இனம் இல்லை | 5,0000/– அல்லது நகராட்சி ஆணையர் அவர்களால் பொது ஏலம் விடப்படும். அல்லது கோசால வசம் ஒப்படைக்கப்படும். |
| 9. | சிவகங்கை நகராட்சியால் அல்லது நகராட்சியால் அங்கீகரிக்கப்பட்ட நபரால் பராமரிக்கப்படும் கால்நடைகளுக்கு பராமரிப்பு தொகையான நாள் ஒன்றிருக்கு ரூ.500/ வசூலிக்கப்படும். | | |
| 10. | நகராட்சியால் உரிமம் பெறாமல் நகர எல்லையில் எந்தவித கால்நடைகளையும் வளர்க்க கூடாது. அப்படிப்பட்ட கால்நடைகளை கைப்பற்றி ஆணையாளர் அவர்கள் அவற்றினை பொது ஏலம் அல்லது கோசாலா மூலம் அப்புறப்படுத்தலாம். | | |

2. பிடிக்கப்பட்ட கால்நடைகளை பராமரித்தல்

தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள் 2023 பிரிவு 292 ன்படி சிவகங்கை நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பொதுமக்களுக்கும் போக்குவரத்திற்கும் இடையூறாக திரியும் கால்நடைகளை பிடித்து சிவகங்கை நகராட்சியால் பிடித்து உறிமையாளர் வரும் வரை பராமரிக்கப்படும்
விலங்குகள் வதை தடுப்பு சட்டம் (Prevention of Cruelty to Animals Act 1960) எவ்வித துன்புறுத்தலுமின்றி கால்நடைகள் பிடித்து அடைக்கப்பட வேண்டும்.
கால்நடைகளுக்கு தோலவயான உணவு மற்றும் தண்ணீர் முறையாக வழங்கப்படும்.
கால்நடை உரிமையாளர்கள் அடையாள அட்டை நகல் மற்றும் உறுதி மொழி (ரூ 10/– மதிப்புள்ள பத்திர தாளில்) வழங்கி கால்நடைகளை திரும்ப பெற்று கொள்ளலாம்

3. காவல்துறை மூலம் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள்:

இந்திய தண்டனைச் சட்டம் 1880 பிரிவு 208, 289 – 003 படி சிவகங்கை நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கொண்டியாய் திரியும் கால்நடைகள் நகராட்சி ஊழியர்கள் பிடிக்கையில் சம்பந்தப்பட்ட கால்நடை உரிமையாளர்கள் அல்லது பொது மக்களால் ஏற்படும் இடையூறுகளுக்கு நகராட்சி ஆணையாளர் மூலம் காவல் துறைக்கு தகவல் தெரிவிக்கப்பட்டு சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

நகர்மன்றம் அனுமதி எண் 140 நாள்.139.01 2026

ஆணையாளர்
சிவகங்கை நகராட்சி

வி.வெ.எண்: 24/ 2026 / செமதொஅ/ சிவகங்கை/ நாள்: 12.02.2026.

DHINA TAMIL DAILY : Published and Printed By Rajasingh, Published from 16C, 246 Cross, Professor Joseph Street, Simon Nagar, Nagercoil - 629001.
Printing at Sree Murugan Printers, 209/A, Vaithyanathapuram, Kottar Post, Nagercoil - 629002. Ph : 99944 66200. Editor : Rajasingh. All Claims are subject to the Nagercoil Jurisdiction.